# மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியத்துவம்
# ORDER OF THE MELCHIZEDEK PRIESTHOOD

## அறிமுகம்

தேவன் தமது உடன்படிக்கையை பாவமுள்ள மனிதனோடு ஏற்படுத்திக்கொள்வதற்கு மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியத்துவம் எப்படி பயன்படுகிறது என்பதை புரியவைப்பதே இப்பாடத்தின் நோக்கம். தேவனுடைய உடன்படிக்கைகள் விதிகளையும் கற்பனைகளையும், நியமங்களையும், பிரமாணங்களையும் உள்ளடக்கிய வைகளாக இருக்கின்றன. *ஆதி. 26:4.* அதுமட்டுமல்லாமல், கிருபையும் வாக்குத்தத்தங்களும் கூட இவைகளில் அடங்கியுள்ளன. *2 தீமோ. 1:9* பார்க்கவும். தேவனுடைய படைப்பின் நோக்கம் நிறைவேறும்படியாக அவருக்கும், விசுவாசமுள்ள மக்களுக்கும் இடையில் சமாதானம் உண்டாகும்பொருட்டு விசுவாசத்தின் மூலமாகக் கிருபை தந்தருளப்பட்டது. *ரோமர் 5:1-3.*

நான்காம் பாடத்தில் இடம் பெற்றிருந்த சரித்திர அமைப்பே இந்தப் பாடத்திலும் இடம்பெற்றுள்ளது. ஆதாம் முதல் மோசே வரையிலான தேவனுடைய விவரங்களை இதில் பார்க்கிறோம். இந்த விவரம் சாத்தானை பொல்லாங்கனாக காட்டுகிறது. வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலையிலும் மனிதனால் நன்மையை தேர்ந்தெடுக்க முடியாததினால், ஆவிக்குரிய மரணத்தை உண்டாக்கும் அதிகாரத்தை சாத்தான் பெற்றுவிட்டான். இன்றைக்கு "கிறிஸ்துவுக்கு வெளியே" வாழ்ந்துகொண்டிருக்கிற யாவரும் சாத்தானுடைய அதிகாரத்துக்கு உட்பட்டு இருக்கிறார்கள். இந்த மக்களைப் பயன்படுத்தி, பிசாசு தன் வல்லமையை அதிகரித்துக்கொள்கிறான். சரீர மரணத்தைக் குறித்து இவர்களுக்கு இருக்கிற பயமே இதற்குக் காரணமாகும். மக்களைக் கொல்லும்படி தேவன் பிசாசை அனுமதிப்பதில்லை, இந்த வல்லமை தேவனிடம் தான் இருக்கிறது. அப்படியிருந்தாலும், ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தன்னை பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்ற உள்ளுணர்வு இருக்கின்றது. அதே சமயத்தில்





போதுமான அளவுக்குத் தன்னை பாதுகாத்துக் கொள்ள முடியாது என்ற பயமும் இருக்கிறது. இதைச் சாத்தான் பயன்படுத்தி, மக்களை பயமுறுத்தி, அவர்களை பயம்நிறைந்த பிராணிகளைப் போல் ஆக்கிவிட்டான். மக்களுடைய பாதுகாப்புக்கு எப்பொழுதெல்லாம் அச்சுறுத்தல் வருகின்றதோ, அப்பொழுதெல்லாம் இதைப் போன்ற பரிதாப நிலைக்கு ஆளாகிறார்கள். பாதுகாப்பற்ற சூழ்நிலையில் மக்கள் தாக்கப்படும்போதும், கோபத்தினாலும் பயத்தினாலும் தங்களைத் தாக்குபவர்களை எதிர்த்துத் தாக்குகிறார்கள்.

சர்வ வல்லமையுள்ள தேவன் நல்லவராக இருக்கின்றார். "தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே" என்று இயேசு சொல்லியிருக்கிறார். *மத்தேயு 19:17.* இந்த வசனத்தில் நல்லவன் என்ற வார்த்தை **அகத்தோஸ் (agathos)** என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மனுக்குலத்தைப் பற்றிய தேவனுடைய நோக்கம் நிறைவேறுவதற்கு ஏற்ற வகையில், அவர் நன்மைகளையே செய்கிறார் என்பதே இதின் அர்த்தம். அவர் சிருஷ்டிகராய் இருப்பதினால், ஆதாம் முதல் மோசே வரையில் உள்ள விவரங்களை நாம் கவனிக்கும் பொழுது, மனிதர்களைத் தமது பிள்ளைகளாக மாற்றுவதற்கு பிரயோஜனமான நன்மைகளைச் செய்கிறவராக அவர் மட்டுமே இருக்கிறார்.

## பாடம்

ஆதாம் முதல் ஆபிரகாம் வரையில் உள்ள வேதாகம விவரங்களை நாம் பார்க்கும்பொழுது, தேவன் குறைந்த அளவு தகவலையே நமக்குத் தெரியப்படுத்துகின்றார். ஆயினும், புதிய ஏற்பாட்டில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள தகவல் அடிப்படையில், ஆபிரகாம் இந்தப் பூமியில் வாழ்ந்தபோது, மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியத்துவம் நடைமுறையில் இருந்ததை நாம் புரிந்துகொள்கிறோம். இதைக் குறித்து எபிரெய எழுத்தாளன் பின்வருமாறு தெரிவிக்கிறான்:

*இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான்; ராஜாக்களை*

*முறியடித்து வந்த ஆபிரகாமுக்கு இவன் எதிர்கொண்டு போய், அவனை ஆசீர்வதித்தான். இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றி லும் தசமபாகம் கொடுத்தான்; இவனுடைய முதற்பேராகிய மெல்கிசேதேக்கு என்பதற்கு நீதியின் ராஜா என்றும், பின்பு சாலேமின் ராஜா என்பதற்குச் சமாதானத்தின் ராஜா என்றும் அருத்தமாம். இவன் தகப்பனும் தாயும் வம்ச வரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக் கிறான். எபிரெயர் 7:1-3.*

நமக்குக் குறைவான அளவே தகவல் கொடுக்கப்பட்டிருந்தாலும் கூட இந்த “முறைமையை” குறித்து நம்மால் புரிந்துகொள்ள முடியும். தேவன் இயேசுகிறிஸ்துவை மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ முறைமையின்படியாகவே பிரதான ஆசாரியராக நியமித்திருந்தபடியால், இந்த ஆசாரியத்துவ முறைமையைப் பற்றி நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆசாரியத்துவ முறைமைகளுக்கு அநேக ஒற்றுமைகள் இருக்கின்றன. ஆனால், அவைகளின் தன்மையை பொறுத்தவரையில் ஒரே மாதிரியானவை அல்ல. மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியத்துவம் இருந்த காலத்தில், தேவன் தமது ராஜ்யத்தில் தமக்குப் பிள்ளைகளை ஏற்படுத்திக்கொள்ளும் தீர்மானத்தைக் கொண்டு வரவில்லை. இதுவே ஆசாரியத்துவங்களுக்கு இடையில் முக்கியமான வித்தியாசத்தை உண்டுபண்ணுகிறது. இஸ்ரவேலருடைய விசுவாசம் மிகக் குறைவாக இருந்தபடியினாலே, தேவன் வித்தியாசமான சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்தி லேவிய ஆசாரியத்துவ முறைமையைக் கொண்டுவந்தார். *யாத். 14:10-12; 15:22-26; 17:1-2; 20:18-21; எபிரெயர் 7:11,12.* இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தின் முடிவில் தேவனுடைய தீர்மானம் நிறைவேறும். இதுவே மற்றொரு பாடத்தின் தலைப்பாகும்.

*வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை*





*உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம். நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். எபிரெயர் 4:14,15.*

மெல்கிசேதேக்கு பிரதான ஆசாரியன் என்று சொல்லப்படவில்லை என்றாலும், அவன் உன்னதமான தேவனுடைய ஆசாரியனாய் இருந்து தேவனுடைய ஆசீர்வாதத்தை ஆபிரகாம் பெறும்படியாக அவனை ஆசீர்வதித்தான். *ஆதி.14:19.* இயேசு கிறிஸ்துவைப் போல மெல்கிசேதேக்கு தனது ஆசாரியத்துவத்துக்கென்று பாவ நிவாரண பலியாகத் தன் சரீரத்தை ஒப்புக்கொடுக்கவில்லை. ஆனால், அவனும் மனித சரீரத்தில் தான் வாழ்ந்தான். அவன் ஆபிரகாமிடமிருந்து தசமபாகம் பெற்றுக்கொண்டான். அநேகமாக தன் வாழ்வுக்கு வேண்டிய செலவுகளுக்காக, இதை பெற்றிருக்கலாம். இப்பொழுது இயேசு கிறிஸ்து சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்வதற்காக தேவ சமூகத்தில் காணப்படுகிறார். மெல்கிசேதேக்கு இதைப்போல் அவர் சமூகத்தில் காணப்பட்டதாக நமக்குச் சொல்லப்பட வில்லை. *எபிரெயர் 2:18.* மெல்கிசேதேக்கும், இயேசு கிறிஸ்துவும் “அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே” ஆசாரியரானார்கள் என்று எபிரெய எழுத்தாளன் கூறுகிறான். *எபி. 7:16,17.* அழியாத என்ற வார்த்தை **அகட்டலுட்டஸ் (akatalutes)** என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. “மெல்கிசேதேக்கினுடைய முறைமையின்” படி என்ற சொற்றொடரில் முறைமை என்ற வார்த்தை **டாக்சிஸ் (taxis)** என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. லேவி ஆசாரியத்துவத்தைப் போல் இல்லாமல், இயேசுவின் ஆசாரியத்துவம் நிரந்தரமானதாய் இருக்கின்றது என்பதை நாம் கவனிக்க வேண்டும். இது மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்தைப் போல் நிரந்தரமானது. மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ முறைமை ஆதாம் முதல் மோசே வரை தொடர்ந்திருக்கலாம் அல்லது ஜலப்பிரளயத்துக்குப் பிற்பாடு தொடங்கி மோசே வரைக்கும் நீடித்து இருந்திருக்கலாம். சரீர மரணத்தால் பாதிக்கப்படாத ஆசாரியத்துவ முறைமை இருந்தது என்பது முக்கியமான விஷயம்.

இயேசுவும், மெல்கிசேதேக்கும் ராஜா மற்றும் ஆசாரியன் என்ற இரண்டு பதவிகளை வகிக்கின்றார்கள். *ஆதி.14:18; எபிரெயர் 1:8.* இவர்கள் இருவரும் தேவனுக்கும், மனுக்குலத்துக்கும் ஆசாரியர்களாக எப்படி ஊழியஞ்செய்தார்கள் என்பதை இந்தப் பாடத்தில் நாம் விசேஷமாக கவனிக்கப்போகின்றோம். தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையில் உள்ள உறவை நிலைநிறுத்தும்படியாக ஊழியஞ்செய்பவர்களே ஆசாரியர்கள் என்று எபிரெய நிருபத்தை கற்றுக்கொள்வதன் மூலம் நாம் புரிந்துகொள்ளலாம். தேவனுடைய மக்களைக் குறித்த அவருடைய நோக்கங்கள் நிறைவேறும்படியாக அவர்களுக்கும் இவர்கள் ஊழியஞ்செய்கிறார்கள். *எபிரெயர் 2:16-18; 6:20; 8:6.* இரண்டு ஆசாரியத்துவங்கள் வழியாகவும் தேவன் மனுக்குலத்திற்கு உடன்படிக்கைகளைக் கொடுத்து இருக்கிறார். தேவன் மனுக்குலத்தை எந்த நோக்கத்திற்காகப் படைத்தாரோ, அந்த நோக்கத்தை கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தின் மூலமாகக் கொடுக்கப்பட்ட உடன்படிக்கை நிறைவு செய்கிறது. இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தின் மூலமாகத் தற்பொழுதிருக்கின்ற உடன்படிக்கை ஏற்படுத்தபட்டது. *மத்தேயு 26:28; எபிரெயர் 8:10-12.* இஸ்ரவேல் தேசத்தை உருவாக்கும்படியாக, மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ காலத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மனுஷர்களோடு பல உடன்படிக்கைகள் செய்யப்பட்டன. *ஆதி. 12:1-3; 15:4-6,18;17:2-22; 22:15-18; 35:9-15; 46:3,4* பார்க்கவும். சரீரப்பிரகாரமான இஸ்ரவேலாக இருந்தாலும், ஆவிக்குரிய இஸ்ரவேலாக இருந்தாலும் இரண்டுமே பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. *ரோமர் 11:26.*

உடன்படிக்கை என்றால், அதை ஏற்றுக்கொண்டு காத்துக் கொள்பவர்களுக்கு நன்மையை உண்டாக்கக் கூடிய சட்ட திட்டங்களையும் வாக்குத்தத்தங்களையும் அது கொண்டிருப்பது வழக்கம். இரண்டு ஆசாரியத்துவங்களிலும் உள்ள உடன்படிக்கைகள் பாவத்தை விலக்கக் கூடிய சட்டதிட்டங்களோடு கொடுக்கப்பட்டன. *ஆதி. 26:5; ரோமர் 5:13; ரோமர் 8:1-2; 1 கொரி. 6:10; 10:23.* மக்களுடைய பாவத்தைக் குற்றமாய்





தீர்க்காத பிரமாணங்கள் இயற்கை நியதி வகையைச் சார்ந்தவை; நம்முடைய சரீரங்களுக்குரிய இயற்கையின் நியதியை மருத்துவர்கள் புரிந்துகொண்டு, சரீரப் பிரச்சனைகளை சரி செய்கிறார்கள். ஜீவனுடைய ஆவியின் பிரமாணங்கள் நமது "உள்ளான மனிதன்" எப்படி உருவாக்கப்பட்டான் என்றும், அவன் மகிழ்ச்சியாயிருக்க என்ன செய்ய வேண்டும் என்றும் நமக்கு விளக்குகின்றன. இவைகளை பிதாவாகிய தேவனும், இயேசு கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் புரிந்துகொண்டு இருக்கிறாக்ள். *மத்தேயு 5:3-10; யோவான் 1:3,4; ரோமர் 8:1,2.*

பாவம் என்ற சொல்லுக்கு "குறி தவறுதல்" என்ற ஒரு அர்த்தமும் உண்டு; இயற்கையின் நியதியோ அல்லது ஜீவப் பிரமாணமோ மக்களுடைய பாவங்களுக்காக அவர்கள் மீது குற்றஞ்சுமத்தி அவர்களை தண்டிக்கவில்லை. இயற்கையின் நியதிக்கும், ஜீவப் பிரமாணத்திற்கும் தக்கபடி நடத்தை இல்லையென்றால், மரணம் நேரிடும். விவசாய நிலத்தில் பயிர் செய்யப்பட்டுள்ள செடிகள் அவைகள் எந்த வகை தானியத்தை சார்ந்த செடிகளோ, அந்த வகை தானியத்தை மட்டுமே கொடுக்குமே தவிர, விவசாயி ஆசைப்படுகிற எல்லா வகை தானியங்களையும் அவைகள் கொடுக்காது. இயற்கையின் நியதியை ஒருவன் மீறிவிட்டான் என்பதற்காக யாரும் அவனை சிறைச்சாலையில் அடைப்பதில்லை. ஆதாம் முதல் மோசே வரையிலான கால கட்டத்தில் உலகத்தில் பாவம் பிறந்தது. ஆனால் மோசேயின் நியாயப்பிரமாணம் போன்று அக்காலத்தில் எந்தப் பிரமாணமும் இருக்கவில்லை. அக்காலத்தில் யாரெல்லாம் அவருடைய விதிகளையும், கற்பனைகளையும், நியமங்களையும், பிரமாணங்களையும் கைக்கொள்ளாமல் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போனார்களோ, அவர்களையெல்லாம் ஆவிக்குரிய மரணம் ஆண்டுகொண்டது. *ஆதி. 26:4.* இருந்தாலும், ஆதாம் முதல் மோசே வரை எவர் ஒருவரும் பாவங்கள் நிமித்தம் குற்றஞ்சாட்டப்பட்டு தண்டிக்கப்படவில்லை. மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ காலத்தில் ஜீவப்பிரமாணம் நடைமுறையில் இருந்தது. இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவமும் இதே முறைமையைச் சார்ந்து இருப்பதால், அவருடைய காலத்தில் இதே

வகையான பிரமாணம் நடைமுறையில் இருக்கின்றது. இவைகள் வாழ்வை விவரிக்கின்றன. ஆனால், யாரையும் குற்றஞ்சாட்டி தண்டிப்பதில்லை. ஆசாரியத்துவம் மாற்றப்பட்டதால், நியாயப்பிரமாணமும் மாற்றப்பட்டது. மெல்கிசேதேக்கு ஆசாரியத்துவ முறைமையை மாற்றி, லேவி ஆசாரியத்துவ முறைமையை தேவன் ஏற்படுத்தினார். *எபி. 7:11,12.*

தேவ மக்களின் வாழ்வை விவரிக்கும் பிரமாணங்களை ஆதாம் முதல் மோசே வரைக்கும் வாழ்ந்தவர்களில் அநேகர் கைக்கொள்ள வில்லை. அவர்கள் சட்டத்தை மீறியதற்காகக் குற்றவாளிகள் என்று தண்டிக்கப்படவில்லை. ஆயினும் "வாழ்க்கைப் பெட்டிக்குள்" அடைபட்டிருந்த அவர்களை மரணம் ஆண்டுகொண்டது. அவர்கள் தேவனுடைய ஜீவனுக்குத் தூரமாகத் தள்ளப்பட்டார்கள். இதுவே பாவத்தின் ஆளுகையால் ஏற்படும் மரணம் எனப்படுகிறது. உலகில் வாழும் மக்களுடைய வாழ்க்கையை பாவம் ஆண்டுகொண்டு, அவர்களுக்கு ஆவிக்குரிய மரணத்தை ஏற்படுத்திவிடுவதால், அவர்கள் மரித்த நிலைமையில் அதற்குரிய குணங்களோடு வாழ்ந்துவருகிறார்கள். *ரோமர் 5:21.* வேறு வார்த்தைகளில் சொல்வதானால், இயேசுவின் சாயலுக்கொப்பாய் "உள்ளான மனிதனை" மாற்றக்கூடிய ஜீவப்பிரமாணங் களை மீறுபவர்களை இந்தப் பிரமாணங்கள் மரணத் தண்டனைக்கு உட்படுத்துவது இல்லை. அப்படியிருப்பினும், அவர்களுடைய ஆவியை மரணம் ஆண்டுகொள்கிறது. தேவனில்லாமல் வாழக்கூடிய கீழ்த்தரமான வாழ்க்கையே தேவனைப் பிரிவதால் உண்டாகும் மரணமாகும். ஆதாம் முதல் மோசே வரை வாழ்ந்தவர்களின் நிலைமை இதுதான். இன்று உலகத்தில் சாத்தானுடைய ராஜ்யத்துக்குட்பட்டு வாழ்பவர்களின் நிலைமையும் இதேதான் என்பதை அன்றாடம் வெளியாகும் செய்தித்தாள்களும் பல்வேறு தகவல் தொடர்பு சாதனங்களும் தெள்ளத் தெளிவாகத் தெரிவிக்கின்றன. *எபேசியர் 2:1-3.* தேவ கிருபையால் தந்தருளப்பட்ட புதிய உடன்படிக்கையால் கிறிஸ்தவர்கள் "மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறார்கள்". *யோவான் 5:24.* இயேசுவே ஜீவன் என்று நாம் விசுவாசிக்கிறோம். ஆகையால், அவரே நமது வாழ்வுக்கு ஒளியாக இருக்கின்றார். நாம் புதிய உடன்படிக்கைக்கு உரியவர்கள்





ஆனபடியால் கிறிஸ்துவிலும், அவருடைய போதனையிலும் ஜீவப் பிரமாணத்தை நம்மால் காண முடிகிறது. இயேசுவினுடைய வாழ்க்கையின் மீது விசுவாசம் வைத்து, புதிதாகப் பிறந்ததினால், நாம் தேவனுடைய பிள்ளைகளாகிவிட்டோம். *யோவான் 1:12,13.*

லேவி ஆசாரிய முறையில் கொடுக்கப்பட்ட பிரமாணம் இஸ்ரவேலர்களின் பாவங்களின் நிமித்தம் அவர்களைக் குற்றப்படுத்தி தண்டித்தது. ஆகையால் அவர்கள் பாவ நிவாரண பலியை ஆசாரியனிடம் கொண்டுவரவேண்டியதாய் இருந்தது. *லேவி. 4:1-6:7.* உண்மையில், இஸ்ரவேலர்களின் பாவங்களைக் குறித்து அவர்களை பொறுப்பேற்கச் செய்வதே மோசேயின் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதற்கு முக்கிய மான காரணங்களில் ஒன்றாகும். தேவனோ அல்லது பெற்றோரோ தங்கள் பிள்ளைகளை வளர்க்க விரும்பும் விதத்திற்கு உகந்த பிரமாணமாக இது அமையவில்லை. *ரோமர் 7:4,5.* மோசே முதல் கிறிஸ்து வரைக்கும் வாழ்ந்த தேவனுடைய மக்களுக்காக நியமிக்கப்பட்ட பாதுகாவலர்களைப் போலவும், பொறுப்பாளர்களை போலவும் லேவிய ஆசாரியத்துவம் செயல்பட்டது. *கலாத்தியர் 4:1-7.*

தேவனிடம் நெருங்கும்படியாக எப்பேர்ப்பட்ட பலி செலுத்த வேண்டுமென்று காயீனுக்கும், ஆபேலுக்கும் சொல்லப்பட்டிருந்தது. அவர்கள் செலுத்தின பலிகளும், ஆதாம் முதல் மோசே வரை வாழ்ந்த மற்றவர்கள் செலுத்தின பலிகளும், பாவ நிவாரண பலிகள் என்று சொல்லப்படவில்லை. ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான். காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான். *ஆதி. 4:2.* காயீனும், ஆபேலும் தங்களுக்குள் இயற்கையாய் அமையப்பெற்றிருந்த உள்ளுணர்வின்படி சரீர பாதுகாப்புக்காக ஆதாமைப் போல தங்கள் "முகத்தின் வேர்வையால் ஆகாரம்" புசிக்கும்படி கடுமையாய் பாடுபட்டார்கள். காயீனுடைய பலியை ஏற்றுக்கொள்ளாமல், ஆபேலுடைய பலியை தேவன் ஏன் ஏற்றுக்கொண் டார் என்று நமக்குத் தெளிவாக தெரியவில்லை. ஆனாலும், நமக்கு தெரிந்திருப்பது இது தான்:

*விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான். அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான். எபி. 11:4.*

இன்றைக்கு ஆபேல் நம்மிடம் என்ன சொல்கிறான்? அநேகமாக, தேவனுக்கும் காயீன் ஆபேலுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தும் படியாக, அவர்களுக்கும் தமக்கும் இடையே அவர் உடன்படிக்கையை ஏற்படுத்தியிருந்தார் என்று நாம் கருதலாம். உடன்படிக்கை என்று எடுத்துக்கொண்டால், அதனை கைக்கொள்ளும்படியாக நிபந்தனைகளும், சட்டதிட்டங்களும் இருக்கும். அதை கைக்கொள்பவர்களுக்கு நன்மை உண்டாகும்படியாக வாக்குத்தத்தங்களும் இருக்கும். இந்த சகோதரர்கள் அந்த உடன்படிக்கையின் உள் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு விசுவாசிக்க வேண்டியது அவசியமாயிருந்தது. அவர்கள் விசுவாசம் கொண்ட உடனே தேர்ந்தெடுக்கும் உரிமையை தேவன் அவர்களுக்கு கொடுத்துவிட்டார். ஆபேல் இந்த உடன்படிக்கையின் உள் அர்த்தத்தின்மீது விசுவாசம் வைத்தான். அவனுடைய விசுவாசத்தை செய்கையில் காட்டினான். வேதாகம விவரங்களில் இப்படித்தான் தேவனுடைய கிருபையை நாம் பார்க்கின்றோம்.

தேவன், ஆதாம் ஏவாளை தமது சமூகத்திலிருந்து துரத்திவிட்ட பிற்பாடு, தமது ஞானத்தின்படி மனுக்குலத்தோடு மீண்டும் ஐக்கியம் கொள்ளும்படியாக ஒரு வழியை விரைவில் ஏற்படுத்தினார். மக்கள் எந்தவிதமான "வாழ்க்கை பெட்டிக்குள்" அடைபட்டிருந்தாலும், அவர்களால் விசுவாசிக்க முடியும் என்பது தேவனுக்கும் தெரியும். விசுவாசிப்பதற்குக் கல்வியோ, செல்வமோ, அதிக அறிவோ தேவையில்லை. தேவனுடைய உடன்படிக்கையின் மீது விசுவாசம் கொண்டவனாய் ஆபேல் நடந்து கொண்டதால், அவர் அவனை நீதியுள்ளவனாக எண்ணினார். தேவன் பரிசுத்தராய் இருக்கிறார்; ஆகையால் அவருடைய செய்கைகள், நீதியுள்ளவைகள். ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேறிய மனிதன்,





பரிசுத்தமுள்ளவனாய் இருக்கவில்லை; ஆகையால் அவன் நீதியுள்ளவனாக நடந்துகொள்ளவில்லை. இதன் விளைவாக, தேவனுக்கும் மனுக்குலத்துக்கும் இடையில் இருந்த சமாதானம் அகன்று போனது. மனுக்குலத்துக்கு, விசுவாசத்தினால் நீதிமான் ஆக்கும் உபதேசத்தைக் கொடுத்ததின் மூலமாக தேவன் தமது கிருபையை வெளிப்படுத்தினார். *ரோமர் 4:1-8. எபிரெயர் 11*–ஆம் அதிகாரத்தில் நாம் பார்க்கும் விசுவாச மக்களை தேவன், விசுவாசத்தால் நீதிமான்கள் ஆக்கிவிட்டபடியால், அவர்கள் பாவங்களையெல்லாம் மன்னித்துவிட்டார். இவர்களுடைய பாவங்களுக்கும் சேர்த்து பின்னொரு நாளில் இயேசுகிறிஸ்து சிலுவையில் மரணமடைந்து பலியானார். *ரோமர் 3:21-26; எபி. 9:15; 11:39,40.*

விசுவாசத்தினால் நீதிமானாக்கும் உபதேசத்திலே குறிப்பிடப்படும் விசுவாசம், தேவனுடைய வசனத்தைக் கேள்விப்படுவதால் உண்டாகும் விசுவாசத்தை மட்டும் குறிப்பதில்லை, பரீட்சிக்கப்பட்டு பூரணமாக்கப்பட்ட விசுவாசத்தையே இது குறிக்கிறது. *யாக். 1:2-4; 2:22, 23; 1 பேதுரு 1:6,7.* தேவனுடைய வசனத்தைக் கேள்விப்படுவதினாலேயே நமக்கு விசுவாசம் வரவேண்டும். *ரோமர் 10:17.* இயேசு நீதியுள்ளவராய் இருக்கிறார்; அவரைப்போல, விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களையும், தேவன் நீதியுள்ளவர்களாக நினைக்கவேண்டுமென்றால், அவர்களுக்குள் இந்த பூரணமாக்கப்பட்ட விசுவாசம் இருக்கவேண்டியது அவசியம். *1 யோ. 3:5,6.* தேவனுடன் உடன்படிக்கைக்கு உட்பட்டிருந்த ஆபேல், நோவா, ஆபிரகாம் ஆகியோர் தேவன் விருப்பப்பட்டது போலவே நடந்து கொண்டார்கள். "ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டு வந்தான்." *ஆதி. 4:4.* நோவா பேழையை கட்டியபோது, "தேவன் தனக்குக் கட்டளை யிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்." *ஆதி. 6:14,22.* "பின்பு ஆபிரகாம் தன் குமாரனை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான்." *ஆதி. 22:10.* இதை யாக்கோபு தெளிவாக விவரித்துச் சொல்கிறான். *யாக்கோபு 2:20-26.* இந்த விசுவாசத்தினால் நீதிமானாக்கும் உபதேசத்தைக் குறித்து பின்வரும் ஒரு பாடத்தில்

விவரமாகப் படிப்போம். ஆதாம் முதல் மோசே வரையிலும் வாழ்ந்த மனிதர்கள் தேவனோடு ஐக்கியம் கொள்வதற்கு இந்த உபதேசம் பிரயோஜனமாய் இருந்தது என்பதையே இப்பாடத்தில் நாம் புரிந்துகொள்ள வேண்டும். உலகத் தோற்றத்திற்கு முன்னே "வாக்குத்தத்தத்துக்குரிய பிள்ளைகளுக்கென்று" தேவன் ஏற்படுத்தியிருந்த திட்டம் நிறைவேறும் படியாகவே இந்த உபதேசம் கொடுக்கப்பட்டது.

தேவனுடைய தீர்மானங்கள் நீண்டகாலத்துக்குப் பயனளிக்கக் கூடியவைகளாக இருக்கின்றன. இன்றைக்கு கிறிஸ்தவர்களை தம்முடைய பிள்ளைகளாக்கிக் கொள்ளும் தமது நோக்கத்தை நிறைவேற்றும்படியாக, தேவன் தமது பார்வைக்கு நலமானதைச் செய்கிறார். இதற்காகவே அன்றைக்கு நோவாவையும் அவனுடைய குடும்பத்தையும் தவிர மற்ற எல்லா மனிதரையும் தண்ணீருக்குள் மூழ்கும்படி விட்டுவிட்டார். *ஆதி. 6:1-8; 1 பேதுரு 3:18-22.* தேவனுடைய பார்வை விசாலமானது.

*தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு, விசனமாயிருந்தது. அப்பொழுது கர்த்தர்: நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல் மனுஷன் முதற் கொண்டு, மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம் பண்ணுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது. ஆதியாகமம் 6:6,7.*

ஒரு நல்ல தேவன், குற்றமற்ற சிறு பிள்ளைகளை தண்ணீருக்குள் மூழ்கடிக்கலாமா என்று அவிசுவாசிகள் கேட்கக்கூடும். இங்கு மூழ்கடிக்கப்பட்ட சிறு பிள்ளைகள் தேவனுடைய ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உண்மையைப் பார்ப்பதற்கு விசாலமான பார்வை நமக்கு அவசியம். ஆகையால், அவர்கள் மரிக்காமல் இந்தப் பூமியில் வாழ்ந்திருந்தால், அவர்களும் "வாழ்க்கைப் பெட்டிக்குள்" அடைபட்டு திசைமாறிப் போயிருப்பார்கள். அவர்களது எதிர்காலமும் நம்பிக்கையற்றதாக மாறியிருக்கும். ஆனால் இப்பொழுதோ அவர்கள் பரலோகத்தில்





தேவனுடன் இருக்கக்கூடிய உரிமையை பெற்றிருக்கிறாக்ள். *மத்தேயு 18:3,4.* இவர்கள் பெற்றோர் சாத்தானுடைய "தீமை நிறைந்த பெட்டிக்குள்" அடைக்கப்பட்டவர்களாய் வாழ்ந்ததினால், அவர்கள் தப்பிக்க வழியே இல்லாமற்போனது. ஆகவே அவர்கள் மரித்தார்கள். தேவனுக்குத் தெரிந்திருப்பதெல்லாம் நமக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. *உபாகமம் 29:29.*

சாத்தானுடைய கட்டுப்பாட்டுக்குள் இருப்பவர்களை தேவன் எப்படி மீட்கிறார் என்பதே இந்த வேதாகம விவரங்களில் நாம் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சமாகும். இன்றைக்கும் கூட மனதும் மனச்சாட்சியும் பக்குவம் அடைந்தவர்களாய் "ஆதாமுக்குள்" யாரெல்லாம் வாழ்கிறார்களோ, அவர்களெல்லாம் பாவிகளாய் இருக்கிறார்கள். நோவாவின் காலத்தில் வாழ்ந்தவர்களைப் போலவே இவர்களும் தேவனை விட்டுப் பிரிந்து விட்டார்கள். பாவிகளான இவர்கள் தம்மோடு மறுபடியும் ஐக்கியம் கொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. தேவனுடைய பிள்ளைகளாக மாறும்படி இவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கவேண்டும் என்பதே இவருடைய நோக்கம்.

ஒரு ஆரோக்கியமான, மகிழ்ச்சியான குடும்பம் உருவாவதற்கு தேவன் உண்டாக்கின திருமண உடன்படிக்கை முக்கியமானது. *மல்கியா 2:15.* நோவா பேழையை கட்டிய காலத்தில் வாழ்ந்த மக்கள், இந்த உடன்படிக்கையை கைக்கொள்ளாமற்போனார்கள். நோவா காலத்தில் பேரழிவு உண்டானதற்கு தேவன் ஏற்படுத்தியிருந்த இந்த திருமண உடன்படிக்கையை மக்கள் கைக்கொள்ளாமற்போனதும் ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம். "மனுஷர் பூமியின்மேல் பெருகத் துவக்கி, அவர்களுக்குக் குமாரத்திகள் பிறந்தபோது: தேவகுமாரர் மனுஷகுமாரத்தி களை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள்." *ஆதி. 6:1,2.* இங்கு "மனுஷ குமாரத்திகள்" என்ற வார்த்தைகள் தேவனுடைய உடன்படிக்கை களை விசுவாசிக்காத மக்களைக் குறிப்பதாக இருக்கலாம். தேவ குமாரர் என்ற வார்த்தை தேவன் மீது விசுவாசம் கொண்டவர்களாய் வாழ்ந்த

பெற்றோருக்குப் பிறந்த பிள்ளைகளைக் குறிப்பதாக இருக்கலாம். சூழ்நிலை எதுவாக இருந்தாலும், உலக மக்களில் எட்டுப் பேரைத்தவிர மற்ற யாவரையும் அழிக்கக் கூடிய ஒரு முடிவினை தேவன் எடுப்பதற்குத் திருமணம் ஒரு முக்கிய காரணமாக இருந்திருக்கின்றது.

சர்வ வல்லமையுள்ள தேவன் என்று மோசேயிடம் தேவன் தம்மைப் பற்றிக் கூறினார். இதற்காக எபிரெய வார்த்தை **எல்ஷடாய் (El shadday)** உச்சரிப்பதற்கு Ale Shad-dah'-ee. மேலும், அவர் தம்முடைய நாமம் யேகோவா என்பதையும் வெளிப்படுத்தினார். நித்தியமானவர் என்பதே இதன் அர்த்தம். *யாத்திராகமம் 6:3.* நம்முடைய சிருஷ்டிகரும் சர்வவல்லமையுள்ளவருமான தேவனானவர், மனுக்குலத்துக்கென்று ஒரு நித்திய திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார். ஏவாளை சாத்தான் வஞ்சிப்பதற்கு முன்பாகவே தேவன் அவனை அகற்றியிருக்கமுடியும். அவர் அப்படிச் செய்திருந்தால், நாம் பார்த்து வருகின்ற இந்த விவரங்களெல்லாம் உண்டாவதற்கு வாய்ப்பு இருந்திருக்காது. தேவன் நமக்குத் தெரிவிக்கிற வேதாகம விவரங்கள் சாத்தானை எதிரியாகக் காண்பிக்கின்றன. பிள்ளைகள் என்றால், தேர்ந்தெடுக்கிற வாய்ப்பு அவர்களுக்கு இருக்க வேண்டும். இந்த வாய்ப்பு இல்லாமற்போயிருந்தால், தேவனுடைய நித்திய ராஜ்யத்தில் அவருக்கென்று பிள்ளைகள் உருவாகியிருக்கமாட்டார்கள். தேவன் இதுவரையிலும் சாத்தானை அகற்றவில்லை. வருங்காலத்தில் அதைச் செய்துவிடுவார். இயேசு திரும்ப வந்து “அநேக பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில்” அவர் அதைச் செய்வார். பார்க்கவும். *எபிரெயர் 2:10; வெளி. 20:10.* தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்று அவர் மக்களை கட்டாயப்படுத்தியிருக்கலாம். “நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள்” என்று இயேசு சொன்னார். *மத்தேயு 19:17.* தேவன் சாத்தானை அகற்றிவிட்டு, தமது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி மனிதர்களை ஏன் கட்டாயப்படுத்தவில்லை? எல்லா மக்களும் தம்முடைய பிள்ளைகளாகவேண்டும் என்பதே தேவனுடைய நோக்கம். இந்த நோக்கத்தை மனதில் கொண்டே நாம் தேவனுடைய வசனத்தை எப்பொழுதும் படிக்கவேண்டும். பிள்ளைகளுக்கென்று தேவன்





நியமித்துள்ள இயல்பின்படியே தேவனும், பெற்றாரும் பிள்ளைகளை வளர்த்தாகவேண்டும். பிள்ளைகளுக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமை வேண்டும்; இல்லாவிட்டால், அவர்கள் பிள்ளைகள் என்ற சிறப்பினைப் பெறமுடியாது.

இயேசுவானவர் தேவனுடைய பிள்ளைகளை பிதாவின் நித்திய ராஜ்யத்தில் ஒப்படைப்பதே ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை அமைந்துள்ள முக்கியமான திட்டமாகும். *லூக்கா 6:35,36.* தேவன் சாத்தானையும் அவன் கூட்டத்தாரையும் இயேசுவின் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் அவர்கள் தேவனுக்கு எதிரிகளாக இருப்பார்கள். *1 பேதுரு 5:18. எபிரெயர் 1:13.* மக்களுடைய இயல்பான தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு, தவறான வழிகளை சாத்தான் காண்பிக்கின்றான். தேவன் உடன்படிக்கைகளை ஏற்படுத்துகின்றார். இவ்வுடன்படிக்கைகள் கிருபையையும் சட்டதிட்டங்களையும் உள்ளடக்கி உள்ளன. தேவனுடைய மக்கள், தங்கள் இயல்பான தேவைகளை நிறைவு செய்யும் என்று அவருடைய உடன்படிக்கைகள் மீது விசுவாசம் வைக்கின்றார்கள். இவ்விதமாக “மகிமையும், கனமும் சமாதானமும்” நமக்கு உண்டாக்கும் படியான நம்பிக்கையை ஏற்படுத்துகின்றார். *ரோமர் 2:10.* தேவனுடைய உடன்படிக்கைகளை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ மனிதர்களுக்கு உரிமை உண்டு. பிள்ளைகளுக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமை இருக்க வேண்டும் என்று எல்லா பெற்றாருக்கும் தெரியும். நம்முடைய மாநிலத்தின் சட்டமோ, லேவிய ஆசாரியத்துவத்தின் சட்டமோ பிள்ளைகளைச் சரியான விதத்தில் உருவாக்கமுடியாது.

ஆதாம் தொடங்கி ஆபிரகாம் வரை வேதத்தில் நாம் பார்க்கும்போது, மிகக் குறைந்த அளவு விவரங்களே நமக்குத் தெரியவருகின்றன. இருப்பினும், ஆதியாகமத்தில் பல முக்கியமான விஷயங்களை நாம் அறிந்துகொள்கிறோம். இந்த முக்கியமான விஷயங்களைப் பயன்படுத்தி, ஆதாம் முதல் மோசே வரையிலான விவரங்களை நாம் கற்றுக்கொள்ளமுடியும். மீதமுள்ள வேதாகம விவரங்களைக் கற்றுக்கொள்வதற்கும் இவைகள் பயனுள்ளவையாக

இருக்கும். இந்த உபதேசங்களில் சிலவற்றை கீழே கொடுத்திருக்கிறோம்.

**உடன்படிக்கைகள் :**

தேவன் நம்மோடு உடன்படிக்கைகளை பண்ணிக்கொள்வதன் மூலமாக மனுக்குலத்தை கனப்படுத்துகின்றார். புதிய உடன்படிக்கை என்றால் என்ன? தற்பொழுது தேவன் ஏற்படுத்தியுள்ள உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளாமல் நம்மால் தேவனோடு ஐக்கியம் கொள்ளமுடியாது *எபிரெயர் 8:10-12.* நமது மறுபிறப்புக்கென்று செய்யும் செயல்களில், தேவனுடைய புதிய உடன்படிக்கையை ஏற்றுக்கொள்வது தான் மனந்திரும்புதலில் முக்கியப் பங்கு வகிக்கின்றது. கிறிஸ்தவர்கள் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு, தேவனுடைய உடன்படிக்கையை கைக்கொள்ளாத மனநிலையை மாற்றிக்கொண்டு, அவருடைய உடன்படிக்கையை கைக்கொள்ளும்படி முடிவு செய்கிறார்கள்.

**பிரமாணங்கள் :**

இரண்டு வகையான பிரமாணங்கள் உள்ளன. தேசிய சட்டங்களை மீறுபவர்கள் நீதிமன்றங்களில் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்படுகிறார்கள் என்பது உலக மக்கள் அறிந்த ஒன்றுதான். அப்படிப்போல, உலகத்தில் நடைபெறும் இயற்கை நிகழ்வுகளையும், செடி கொடிகள் வளர்வதையும் கவனிக்கும்போது, இயற்கையின் நியதியையும் மக்கள் புரிந்துகொள் கிறார்கள். மனிதனுடைய "உள்ளான மனிதனை" பற்றி விவரமாக விளக்கக்கூடியதும், இயேசு கிறிஸ்து போதித்து வாழ்ந்து காட்டியதுமான ஜீவப்பிரமாணத்தை மட்டும் தான் மக்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். இந்த ஜீவப்பிரமாணம் இயற்கை நியதி வகையைச் சார்ந்தது. தற்காலிகமான நோக்கத்தோடு கொடுக்கப்பட்ட லேவிய ஆசாரியத் துவத்தைப் பற்றியும், மோசேயின் நியாயப்பிரமாணத்தை பற்றியும் புரிந்துகொள்வதற்கு இப்பாடத் தொடரில் உள்ள எட்டாம் பாடம் உதவிகரமாக இருக்கும்.

**தேவனுடைய மக்கள் :**

மக்கள் தங்களை கடவுளோடு இணைத்துக்கொள்ளும் முயற்சியில் பல்வேறு வித்தியாசமான பெயர்களினால் தங்களை அடையாளப்





படுத்திக்கொள்ளுகிறார்கள். இந்த விஷயத்தை விசாலமான பார்வையோடு பார்ப்போமானால், நம்மை அடையாளப்படுத்திக் கொள்வதற்கு இரண்டே வழிகள் தான் உள்ளன. ஒன்று நாம் தேவனுடைய மக்களாய் இருக்க வேண்டும். அல்லது தேவனுடைய மக்கள் அல்லாதவர்களாய் இருக்க வேண்டும். உடன்படிக்கையை கைக்கொள்பவராக இருக்கவேண்டும் அல்லது மீறுபவராக இருக்க வேண்டும். தேவனைப் போல நித்திய ஜீவனை உடையவர்களாக இருக்கவேண்டும் அல்லது பாவத்தில் மரித்தவர்களாய் இருக்கவேண்டும்.

**வாக்குத்தத்தங்கள் :**

தேவனுடைய உடன்படிக்கைகளில் வாக்குத்தத்தங்கள் உள்ளன. அவைகள் மீதே நமது விசுவாசத்தை அதிகமாய் வைக்கிறோம். விசுவாசத்திற்கு ஒரு உறுதியான நோக்கம் வேண்டும். தற்பொழுது வாழ்கின்ற நமது விசுவாசத்தின் நோக்கம் "நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." *எபி. 11:1* பார்க்கவும். அன்று ஆபிரகாமுக்கு செய்யப்பட்ட வாக்குத்தத்தங்கள், இன்று வாழும் தேவனுடைய மக்களோடும் சம்பந்தப்பட்டுள்ளன. *ஆதி. 12:1-3.* தேவனுடைய மக்கள் ஆபிரகாமின் பிள்ளைகள் என்று அழைக்கப் படுகிறார்கள். *ஆதியாகமம் 12:1-2* பார்க்கவும். இக்காலத்துக்கேற்ப புரிந்துகொள்ள *கலாத்தியர் 3:26-29.* பார்க்கவும். ஆபிரகாமுக்குச் செய்யப்பட்ட வாக்குத்தத்தங்களை மையமாக வைத்தே அடுத்த பாடத்தில் பார்க்கப்போகின்றோம்.

**பலிகள் :**

தேவ மக்கள் அவரை வணங்குவதற்கு இது ஒரு வழியாக உள்ளது. முதற்பலனானவைகளில் சிறந்தவைகளையே அவர் விரும்புகிறார். லேவி ஆசாரியத்துவத்தைப்பற்றி நாம் படிக்கும்போது, பல்வேறு விதமான பலிகளைப்பற்றி நாம் தெரிந்துகொள்வோம். அவைகளில் ஒன்று பாவ நிவாரண பலி. ஆதாம் முதல் மோசே வரைக்கும் நாம் பார்க்கும்பொழுது, எங்கும் பாவ நிவாரண பலி செலுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ முறைமையில் பாவத்தைக் குற்றஞ்

சுமத்தும் எந்தப் பிரமாணமும் இணைக்கப்படவில்லை. *ரோமர் 5:12-14.*

**ஆசாரியத்துவங்கள் :**

இரண்டு விதமான ஆசாரியத்துவ முறைமைகள் தேவனால் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளின் ஒன்று, இப்பாடத்தின் தலைப்பாக உள்ளது. இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவம், மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ முறைமையைச் சார்ந்தது. *எபிரெயர் 5:10.* அடுத்த ஆசாரியத்துவ முறைமை லேவி ஆசாரியத்துவ முறைமையாகும், இது தற்காலிகமானது. *எபிரெயர் 7:11.*

ஜீவப் பிரமாணத்தையும், விசுவாசத்தினால் நீதிமானாக்கும் உபதேசத்தையும் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ளும்படியாய், உங்கள் விசுவாசத்தைப் பக்குவப்படுத்தும் வகையில், இப்பாடம் எழுதப்பட்டு உள்ளது. தேவனுடைய உடன்படிக்கை மீது பூரணமான விசுவாசம் உள்ளவர்களே நீதிமான்களாக்கப்பட்ட பாவிகள். இந்தக் கிருபையின் அடிப்படையிலேயே, நாம் விசுவாசத்தில் நிலைகொண்டிருந்து தேவனிடத் –தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.